உ

சிவமயம்



தமிழீழம் யாழ்ப்பாணத்தில் பிறந்தவரும்
இறுதிக்காலத்தில் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் வசித்து வந்தவருமான

**திருமதி காந்தபூபதி பத்மநாதன்** அவர்களது

# நினைவு மலர்

25.07.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரால் காணிக்கை...

நாமெல்லாம் இந்த நானிலத்தில்
வாழ்வாங்கு வாழ வேண்டும் எனும் நோக்கில்
உங்கள் உடல் பொருள் ஆவி
அனைத்தையும் எமக்கீந்து
ஒளி தருவதற்கு தனையழிக்கும்
மெழுகுவர்த்தி போல் - உம்மை
நீர் உருக்கி எமக்கு உயரிய
வாழ்வு தந்தீர்
இன்று வானுறையும் தெய்வத்துள்
பொய்யுடம்பகற்றி புகழுடம்பு எய்தவேளை
உமது சேவைகளை மனத்திருத்தி
பொங்கிவரும் கண்ணீரால் இச்சீரியமலரை
உங்கள் பொன்னடிக்குச் சமர்ப்பணம் செய்கின்றோம்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**பாசமிகு கணவன்,**
**பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள், மருமக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## திருமதி காந்தபூபதி பத்மநாதன்

தாயின் மடியில்

**21.11.1937**

தலைவன் அடியில்

**24.06.2012**

## திதி வெண்பா

சீர் ஆண்டாம் ஸ்ரீநந்தனத்து சேர் திங்கள் ஆனிதனில்
ஈர்ஐந்தாம் நாள்பூத்த பஞ்சமித் திதியதனில் – காந்தபூபதி
பேர் பூத்த காரிகையாள் நீராண்ட கண்களுடன் நிர்க்கதியாய் எமைவிட்டு
சேர்ந்தாரே சிவன்பாதம் சிறப்புடனே சேவிக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரந்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகிறேனே

## தேவாரம்

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழு தெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமாறீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச்சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புகழ்

ஏறு மயில் ஏறி விளையாடு முகம் ஒன்றெ
ஈசருடன் ஞான மொழி பேசுமுக மொன்றே
கூறு மடியார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம் புணர வந்தமுக மொன்றே
ஆறு முகமான பொருள் நீ யருள வேண்டும்
ஆதி யரு ணாசல மர்ந்த பெரு மாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்

### திருச்சிற்றம்பலம்

### பட்டினத்தார் பாடல்கள்

என்செயல் ஆவது யாதுஒன்றும்
இல்லை இனித் தெய்வமே
உன்செயலேஎன்று உணரப்பெற்றேன்
இந்த ஊன் எடுத்த
பின்செய்த தீவினை யாதுஒன்றும்
இல்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோஇங்ஙு
இந்தனேவந்து மூண்டதுவே

என்பெற்ற தாயாரும் என்னைப்
பிணம்என்று இகழ்ந்து விட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று
சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம்
வந்து குடமுடைத்தார்
உன்பற்று ஒழிய ஒருபற்றும்
இல்லை உடையவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரத்துவம் அடைந்த
## திருமதி காந்தபூபதி பத்மநாதன் அவர்களது
## வாழ்க்கை வரலாறு

தமிழ் உரிமைக்கு ஓங்கிக் குரல் கொடுப்பதில் பெயர்பெற்ற பேரூராம் உரும்பிராயும் நல்லோர்கள் நிறைபதியாம் நல்லூரும் பெற்ற புண்ணிய தம்பதிகள் அரியரத்தினம் செல்லம்மா தாம் பெற்ற தவப்புதல்வியாம் காந்தக் கண்ணழகி காந்தபூபதி 21ம் திகதி கார்த்திகை மாதம் 1937ம் ஆண்டு பலாங்கொடையில் பிறந்தார்.

நான்காவது பிள்ளையாக நானிலத்தில் உதித்த அவர் ஆரம்பக்கல்வியை பலாங்கொடையிலும் பின்னர் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் பயின்றார்.

கல்வியில் கேள்வியில் கருத்தைச் செலுத்தியவர், கற்றோர் அவையில் முந்தியிருந்து தன் கல்வித் திறமையை கற்றாரே காமுற வைத்தவர். அத்துடன் கர்நாடக இசையிலும் வீணை வாசிப்பதிலும் பாண்டித்தியம் பெற்றவர்.

காலம் வந்த வேளை காளை ஒருவனைக் கைப்பிடித்து வைக்கப் பெற்றோர் விளைந்த வேளையில் தன்னுடைய சொந்த மைத்துனனான விசுவலிங்கம் பத்மநாதன் அவர்களை 1966இல் அந்தணர்கள் மறையோத அரிவையர்கள் மலர்தூவ வந்தவர்கள் வாழ்த்தொலிக்க செந்தழலை வலம் வந்து கணவனாக வரித்தார்

இல்லறம் வாழ்வது இனிதுற நடந்தமையால் நல்மக்கள் மூவர் நண்ணினர் மேதினியில். தமிழ் மூன்று, தமிழ் போற்றும் குறளின் பால் மூன்று, கனிகள் மூன்று வகை போல், இவர்கள் இல்லறத்தில் பூத்த மலர்கள் மூன்று. ஸ்ரீகமலன், கார்த்திகா, ஸ்ரீரெங்கர் என்ற புத்திரர்களை மெத்தனவும் காத்து வளர்த்தனர்.

இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பதற்கமைய இளமையிலே இச்சிறார்களுக்கு, வேண்டிய கல்விதனை ஊட்டி இன்று கடல் கடந்து அவர்கள் எல்லோரும் கவினுறவே வாழ்கிறார்கள். குறிப்பாக மகள் கார்த்திகாவுக்கு சென்னை மா நகரத்தில் நடன அரங்கேற்றத்தையும் செய்து களிப்புற்றார். கணவன் வேலை காரணமாக வெளிநாடு சென்றதனால் பிள்ளைகள் எல்லோருக்கும் தாய்க்குத் தாயாகவும் தந்தைக்குத் தந்தையாகவும் இருந்து வழிகாட்டிய கலங்கரை விளக்கம் திருமதி காந்தபூபதி பத்மநாதன் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய சகோதரரான வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி அவர்களும் அவரது மனைவியான மைத்துனி வைத்திய கலாநிதி தர்மவல்லி அவர்களும் 1990ம் ஆண்டு மலேசியாவில் விபத்தொன்றில் சிக்கி அகால மரணமடைந்த வேளை இங்கிலாந்து வந்த அவர் தன்னுடைய இறுதிக்காலம் வரை இங்கிலாந்திலேயே வாழ்ந்து வந்தார்.

பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபாவின் பக்தரான இவர், வேல்ஸ் நகரில் கோயில் கொண்டருளி இருக்கும் ஸ்கந்தவேல் என்னும் திருக்கோயிலின் பிரதம குருவான சுப்பிரமணிய சுவாமிகளின் ஆசீர்வாதத்தோடு தனது மூன்று பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து வைத்ததனால் இன்று அவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களது நல்லற வாழ்வு காரணமாக ஐந்து பேரப்பிள்ளைகளையும் பெற்றுக்கொண்டார்.

நீரிழிவு நோயின் காரணமாக அவரை டிமென்சியா (Dementia) என்னும் நினைவு மறதி கொடுக்கின்ற நோய் தாக்கியதிலிருந்து மீள முடியாது 24.06.2012 இல் மீளாத்துயிலில் ஆழ்ந்து விட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவோமாக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Bhajans

Guru Bhagavan Sai Ram
Sadguru Natha Sai Bhagavan
Guru Bhagavan Sai Ram
Prashanti Vasa Deena Dayala
Parthipurisha Parama Dayala
Sadguru Natha Sai Bhagavan

Sadguru Brahmma Sanarthana Hey
Parama Dayagana Pavana Hey
Janmaja Dukha Vinashaka Hey
Jagato dharana Karana Hey
Sai Krishna Janardhana Hey
Bhava Bhaya Jaladhi Tarana Hey

Jai Jai Prabhu Giridhari Natavara Nandalala
Natavara Nandalala Hey Giridhari Gopala
Hey Giridhari Gopala Hey Giridhari Gopala Hey Giridhari Gopala

Amma Amma Amma Amma
Katharulum Deivame Amma Amma
Karunai Kaaddum Deivame Amma Amma - Amma
Siva Shakthi Roopame Amma
Radha Krishna Roopame Amma Amma - Amma
Sriganesha Saraswathy Luxmi Amma
Sathya Sai Baba Deivame Amma Amma - Amma

## தேற்றம்

மெய்யதனை பொய்யென்று மேதினியில் உணராது
மெய்யதனை மெய்யென்று மெய்யதனை உணராது
பொய்யான வாழ்வதனை வாழ்கின்ற நிலை விடுத்து
மெய்யனாம் சிவன் பாதம் சேவித்து வாழுவமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Thank you*

Our family is extremely grateful for the many people who have shown support and care for both Mrs K Pathmanathan and us over the past few years. Many people have visited, called and devoted prayers for her, reminding us that we are all part of a large, international community of caring and compassionate family. To those people who took on the direct role of care givers, there are not adequate words to express our thanks for your hard work.

Since her passing, we have been overwhelmed by the help that has been offered through, for example, friends and relatives bringing food, making charitable donations in her memory and assisting in organising the funeral and making it such a beautiful, memorable tribute to her life. Thanks to all of you who were present at the funeral to show your respects and express your condolences. The ongoing support of the Churches and the Sai Centre is greatly appreciated, throughout this painful time,

Please know that your acts of kindness and generosity are valued and much appreciated.


**Pathmanathan & Family**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Mrs. Kanthapoopathy (Kanthy) Pathmanathan




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed & Printed @ JR Print, www.jrprint.com T 0208 503 6643